# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்.

**முன்னிலை:-** திரு: எஸ்.பி.பரத்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1 கரூர்

தமிழ் விசுவாவசு வருடம், மாசி மாதம் 28 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள், வியாழக்கிழமை,

## ஆண்டுப்பட்டிகை விசாரணை வழக்கு எண். 24/2026

## **CNR- TNKR**02-000615-2026

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Name of the court | Judicial Magistrate No.1,Karur. | | |
| 2. | Name of the Judge | Thiru.S.P.Barathkumar M.B.A.,L.L.M., | | |
| 3. | Date of Judgment | 12.03.2026 | | |
| 4. | Case Number along with CNR Number | CC NO 24/2026<br>CNR- **TNKR**02-000615-2026 | | |
| 5. | Name of the Parties of the case | Sub Inspector of police<br>PEW Karur PS /Vs/<br>Muthu Balaji, S/o Kannan | | |
| 6. | Date of Occurrence | 27.07.2025 | | |
| 7. | Date of Complaint | 27.07.2025 | | |
| 8. | Date of Arrest if any and Remand | 27.07.2025 | | |
| 9. | Period of remand of the accused | NIL | | |
| 10. | Date of Release on bail | 27.07.2025 | | |
| 11. | Date of Final report | 04.09.2025 | | |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil | | |
| 13. | Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 of Code of Criminal Procedure | 09.03.2026 | | |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness | Chief | Cross |
| | | PW-1<br>PW-2 | 09.03.2026<br>09.03.2026 | இல்லை<br>இல்லை |

| | | |
|---|---|---|
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil |
| 16 | Date of examination of the accused U/s. 313 of the Code | 12.03.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil |
| 19. | Date of Commencement of Trial | 09.03.2026 |
| 20. | Date of closure of Trial | 12.03.2026 |
| 21. | Date of Sentence or order | 12.03.2026 |
| 22. | Date of service of copy of judgment to the accused | 12.03.2026 |
| 23. | If any delay, give explanation | Nil |

இவ்வழக்கானது கடந்த 20.01.2026 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 12.03.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 12.03.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

| | |
|---|---|
| புகார்தாரர் | Sub Inspector of police<br>PEW Karur PS<br>கா.கு.எண். 117/2025 |
| எதிரியின் பெயர் | முத்து பாலாஜி,<br>த/பெ. கண்ணன், |

| | |
|---|---|
| | 44/65, பொறிக்காரத்தெரு,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 8(c),20(b)(ii)(A) NDPS ACT 1985 |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 8(c),20(b)(ii)(A) NDPS ACT 1985 |
| எதிரியின் பதில் | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | திரு. R. தண்டபாணி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | ஆஜர் இல்லை |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 12.03.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 12.03.2026 |

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 27.07.2025 ம் தேதி 10.00 மணிக்கு காவல் நிலைய சரகம் எல்லைக்குட்பட்ட மக்கள்பாதை டாஸ்மாக் கடை எதிரில் எதிரி முத்துபாலாஜி என்பவர் தான் சுயலாபம் அடையும் பொருட்டு அரசுக்கு எதிராக சட்டவிரோதமாகவும், சமுதாயத்திற்கு சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடிய விதமாக 95 கிராம் எடையுள்ள கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாகவும், எனவே எதிரியின் மீது U/s. 8(c), r/w 20(b)(ii)(A) NDPS ACT 1985 ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேற்படி வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு விசாரணை வழக்கு எண்.24/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207-ஆவது பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரி மீதான சட்டப்பிரிவு U/s. 8(c),20(b)(ii)(A) NDPS ACT 1985 ன் படி குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்து, பொய் வழக்கு, என்றார். எனவே அரசுதரப்பு சாட்சிக்கு

அழைப்பாணை அனுப்பபப்பட்டு அரசுதரப்பு சாட்சியின் விசாரணை தொடங்கியது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு சான்றுபொருள் ஒன்றும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-</u>

i) அ.சா.1 தனது சாட்சியத்தில் "நான் கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2025 ம் தேதி கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் ரமேஷ், செந்தில் குமார் ஆகியோருடன் கஞ்சா தடுப்பு ரோந்து அலுவலாக தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு மக்கள் பாதை டாஸ்மாக் கடை எதிரே கண்காணித்தபோது, அங்கிருந்த ஒரு நபர் பாலித்தீன் கவருடன் இருந்தவர் எங்களை கண்டதும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, அவர் பெயர் முத்து பாலாஜி எனக்கூறினார். அவர். ஆஜர் எதிரிதான். கையில் வைத்திருந்த பாலித்தீன் கவரை சோதனை செய்ய வேண்டும் எனவும், அதை நீதிபதி முன்போ, வருவாய் வட்டாட்சியர், டிஎஸ்.பி முன்போ சோதனை செய்ய வேண்டுமா என கேட்டபோது, உதவி ஆய்வாளரிடம் சோதனை சம்மதம் தெரிவித்ததால் சோதனை சம்மதக் கடிதத்தின் பேரில் அவர் வைத்திருந்த பாலித்தீன் கவரில் கஞ்சா தூள் இருந்தது. கொண்டு சென்ற தராசில் நிறுத்து பார்த்தபோது 95 கிராம் கஞ்சாத்தூள் இருந்தது. எதிரி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருப்பதாக குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் கைதுக்கான கைது செய்தும், 95 கிராம் கஞ்சாத்தூளிலிருந்து தலா 20 கிராம் வீதம் கஞ்சாத்தூளை ரசாயன பகுப்பாய்விற்காக இரண்டாக பிரித்து கட்டி SHO சீல் வைத்தும், தனிநபர் யாரும் முன்வராததால் ரமேஷ் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் ரமேஷ் என்பவர் கையொப்பம் செய்தார். **அந்த**

**கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1.** பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் கொண்டவந்து, நிலைய கு.எண்.117/2025, ச.பி.8(C)20,(b),(II)(A) NDPS ன்படி வழக்கு பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 தனது சாட்சியத்தில், "நான் கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2025 ம் தேதி கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் ரமேஷ், அறிவழகன் ஆகியோருடன் கஞ்சா தடுப்பு ரோந்து அலுவலாக தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு மக்கள் பாதை டாஸ்மாக் கடை எதிரே கண்காணித்தபோது, அங்கிருந்த ஒரு நபர் பாலித்தீன் கவருடன் இருந்தவர் எங்களை கண்டதும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, அவர் பெயர் முத்து பாலாஜி எனக்கூறினார். அவர். ஆஜர் எதிரிதான். கையில் வைத்திருந்த பாலித்தீன் கவரை சோதனை செய்ய வேண்டும் எனவும், அதை நீதிபதி முன்போ, வருவாய் வட்டாட்சியர், டிஎஸ்.பி முன்போ சோதனை செய்ய வேண்டுமா என கேட்டபோது, என்னிடம் கேட்டபோது சோதனை சம்மதம் தெரிவித்ததால் சோதனை சம்மதக் கடிதம் பெறப்பட்டது. **அந்த சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 2.** அவர் வைத்திருந்த பாலித்தீன் கவரில் கஞ்சா தூள் இருந்தது. கொண்டு சென்ற தராசில் நிறுத்து பார்த்தபோது 95 கிராம் கஞ்சாத்தூள் இருந்தது. எதிரி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருப்பதாக குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் கைதுக்கான கைது செய்தும், 95 கிராம் கஞ்சாத்தூளிலிருந்து தலா 20 கிராம் வீதம் கஞ்சாத்தூளை ரசாயன பகுப்பாய்விற்காக இரண்டாக பிரித்த கட்டி SHO சீல் வைத்தும், தன்நபர் யாரும் முன்வராததால் ரமேஷ் மற்றும் அறிவழகன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் கொண்டவந்து, நிலைய கு.எண்.117/2025, ச.பி.8(C)20,(b),(II)(A) NDPS ன்படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3.** பின்னர் தக்க பிணையில் எதிரியை விடுவித்தேன். பின்னர் வழக்குச் சொத்தினை

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.4. 95 கிராம் கஞ்சாத்தூள் அ.சா.பொ.1 (கஞ்சாத்தூள் அழிக்கப்பட்டது).** மாதிரிக்காக எடுக்கப்பட்ட தலா 20 கிராம் வீதம் எடுக்கப்பட்ட இரண்டு பொட்டலங்கள் கஞ்சாத்தூளை நீதிமன்ற உத்தரவின்பேரில் ரமேஷ் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். 21.08.2025ம் தேதி பகுப்பாய்வாளர் திருமதி.கலைவாணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பகுப்பாய்வறிக்கை அ.சா.ஆ.5.** பின்னர் நான் சாட்சிகள் அறிவழகன், ரமேஷ், கலைவாணி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6) எதிரியிடம், அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) வின் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்றார்.

<u>7) பிரச்சனைக்குரிய தீர்வு:-</u>

கடந்த 27.07.2025ம் தேதி 10.00 மணிக்கு காவல் நிலைய சரகம் எல்லைக்குட்பட்ட மக்கள்பாதை டாஸ்மாக் கடை எதிரில் எதிரி முத்துபாலாஜி என்பவர் தான் சுயலாபம் அடையும் பொருட்டு அரசுக்கு எதிராக சட்டவிரோதமாகவும், சமுதாயத்திற்கு சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடிய விதமாக 95 கிராம் எடையுள்ள கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாகவும், எனவே எதிரியின் மீது U/s. 8(c), r/w 20(b)(ii)(A) NDPS ACT 1985ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் எதிரி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்ததாக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 கரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளர் அறிவழகன், அ.சா.2 சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில் குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் ரமேஷ் ஆகிய மூவரும் மதுவிலக்கு அமலாக்க குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக மக்கள்பாதை டாஸ்மாக் கடை அருகே கண்காணித்தபோது,அங்கிருந்த ஒரு நபர் பாலித்தீன் கவருடன் இருந்தவர் எங்களை கண்டதும் ஓட முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது, அவர் பெயர் முத்து பாலாஜி என்றும், அவரிடமிருந்து சுமார் 95 கிராம் எடையுள்ள கஞ்சாவை கைப்பற்றியதாகவும், மேற்படி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

9) மேலும் அ.சா.1, எதிரியின் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது அதில் 95 கிராம் பச்சை மற்றும் பழுப்பு நிறத்தில் இலைகள் மற்றும் விதைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது என்றும், அதை தன் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் பொதுமக்கள் சாட்சிகள் யாரும் முன்வராத சூழ்நிலையில் போலிசாரே இவ்வழக்கில் மேற்படி கஞ்சா துகள்களை கைப்பற்றியுள்ளதும் மேற்படி ஆவணங்களைப் பரிசீலிக்கையில் தெரியவருகிறது. பகுப்பாய்வு அறிக்கையில் கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.2 திரு. செந்தில்குமார் அவர்களும் அ.சா.1 ன் சாட்சியத்தினை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யவில்லை. மேற்படி குறுக்கு விசாரணை செய்யாததால், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்களை எதிரி தரப்பில் ஏற்றுக் கொண்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

10) எனவே, மேற்கண்டவாறு வழக்கின் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீதான பிரிவு- 8(c) r/w 20(b)(ii)(A) of NDPS Act -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி. 8(c) r/w 20(b)(ii)(A) of NDPS Act ன் கீழான குற்றத்தை சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு ச/பி. 8(c) r/w 20(b)(ii)(A) of NDPS Act பிரிவின் கீழான குற்றத்திற்கு ஒருநாள் நீதிமன்றம் கலையும்வரை மெய்க்காவல் சிறைதண்டனையும் மற்றும் அபராதம் ரூ.1,000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 3 மாதம் காலம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு-255(2)-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மொத்த அபராதம் தொகை **ரூ.1,000/-** .

12) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **R.P.No**. 578/25 ல் கண்டுள்ள 95 **கிராம்** அளவுள்ள போதைப் பொருளான கஞ்சாவை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின்னிட்டு காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்து உரிய முறையில் அழித்து அதற்கான ஒப்புதலை நீதிமன்றத்தில் அளிக்க உத்தரவிடுப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 12.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.12 19:40:21 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.அறிவழகன், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.2 | திரு. செந்தில்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | சோதனை சம்மதகடிதம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | படிவம் 91 |
| அ.சா.ஆ.5 | பகுப்பாய்வு அறிக்கை |

**எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-** - இல்லை

**எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்** :- இல்லை

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:-**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 95 கிராம் கஞ்சாத்துாள்(**R.P.No**. 578/25) |

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.12 19:40:31 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | |
|---|---|
| **CC No**. 24/2026 நாள் : 12.03.2026<br><br>**எதிரி ஆஜர். தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.**<br><br>முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி. 8(c) r/w 20(b)(ii)(A) of NDPS Act ன் கீழான குற்றத்தை சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு ச/பி. 8(c) r/w 20(b)(ii)(A) of NDPS Act பிரிவின் கீழான குற்றத்திற்கு ஒருநாள் நீதிமன்றம் கலையும்வரை மெய்க்காவல் சிறைதண்டனையும் மற்றும் அபராதம் ரூ.1,000/- விதித்தும், அபராதம் கட்டதவறினால் 3 மாதம் காலம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு-255(2)-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மொத்த அபராதம் தொகை ரூ.1,000/- .<br><br>இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **R.P.No**. 578/25 ல் கண்டுள்ள 95 **கிராம்** அளவுள்ள போதைப் பொருளான கஞ்சாவை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின்னிட்டு காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்து உரிய முறையில் அழித்து அதற்கான ஒப்புதலை நீதிமன்றத்தில் அளிக்க உத்தரவிடுப்படுகிறது.<br><br>BARATH KUMAR — Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.12 19:40:42 +0530<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | |

| | |
|---|---|
| | |